# TAMIL DHS AVOID A DEBT

Person 1: Department of Human Service யிடமிருந்து நான் நிவாரணப்பணம் அல்லது கொடுப்பனவு பெறுகிறேன் என்றால், என் வாழ்க்கைச் சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டால் அத்தகைய மாற்றம் குறித்த தகவலை நான் அவர்களுக்கு தெரியப்படுத்தவேண்டுமா ?

Person 2: ஆமாம். உங்கள் வாழ்க்கைச் சூழ்நிலையில் அல்லது உங்கள் துணைவர், துணைவியின் சூழ்நிலையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டால், அந்த தகவலை 14 நாட்களுக்குள் அந்த துறையிடம் தெரிவிப்பது மிகவும் முக்கியமானது. உங்கள் வாழ்க்கைச் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்து உங்களுக்கு வழங்கப்பட்டுவரும் உங்களுக்கு உரித்தான நிவாரணப்பண த்தில் அல்லது கொடுப்பனவில் மாற்றம் ஏற்படுத்தப்படும்.

Person 1: எந்த வகையான குடும்ப சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களை நான் இந்த துறையினரிடம் தெரிவிக்கவேண்டும் ?

Person 2: இது நல்ல கேள்வி. உதாரணமாக, உங்களுக்கோ அல்லது உங்களது துணைவர், துணைவிக்கோ கிடைக்கும் வருமானத்தில் மாற்றம் ஏற்பட்டாலோ, உங்கள் முகவரி அல்லது நீங்கள் செலுத்தும் வீட்டு வாடகையில் மாற்றம் ஏற்பட்டாலோ, நீங்கள் தங்கியிருக்கும் ஏற்பாட்டிலிருந்து விலகினாலோ அல்லது புதிதாக யாருடனாவது தங்கத் துவங்கினாலோ, உங்களுக்கு திருமணம் ஆனாலோ அல்லது உறவிலிருந்து பிரிந்தாலோ, துணைவர், துணைவி இறந்துவிட்டாலோ, நீங்களோ அல்லது உங்கள் துணைவர், துணைவி கல்வி கற்கத் துவங்கினாலோ, அல்லது படிப்பை நிறுத்தினாலோ அல்லது கல்விபாட எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்தினாலோ, நீங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ வெளியேறினாலோ... என்று இதுபோன்ற அனைத்து தகவல்களையும் நீங்கள் Human Services Department யிடம் தெரிவிக்க வேண்டும்.

Person 1: ஏன் இதுபோன்ற தகவல்களை இத்துறையினரிடம் தெரிவிக்கவேண்டியது முக்கியமானது ?

Person 2: உங்கள் வாழ்க்கை சூழ்நிலையில் ஏற்படும் மாற்றத்தை நீங்கள் தெரிவிக்காவிடில் உங்களுக்கு தொடர்ந்து தவறான கொடுப்பனவு அல்லது நிவாரணப்பணம் வழங்கப்பட்டுவரும். நீங்கள் அந்தப்பணத்தை கட்டாயம் திரும்பசெலுத்தவேண்டிவரும்.

Person 1: நான் இத்துறைக்கு கடன்பட்டிருந்தால் என்ன செய்யவேண்டும் ?

Person 2: நீங்கள் பணம் திரும்பச் செலுத்தவேண்டியிருந்தால் உங்கள் சூழ்நிலையை விளக்கி, இந்த பணத்தை நீங்கள் எப்படி திரும்பச் செலுத்தபோகின்றீர்கள் என்று இத்துறைக்கு ஒரு கடிதம் அனுப்பிவையுங்கள். ஒருவேளை கடனை திரும்பச் செலுத்துவதில் உங்களுக்கு ஏதும் சிக்கல் இருந்தால், பணத்தை திரும்பச் செலுத்தும் ஏற்பாடு குறித்து நீங்கள் இத்துறையை தொடர்புகொண்டு பேசுங்கள்.

நினைவில் வைத்திருங்கள் – உங்கள் சூழ்நிலை மாறினால் அதுகுறித்து Department of Human Service க்கு தெரிவிக்கவேண்டியது முக்கியமானது. உங்கள் சூழ்நிலை குறித்து தவறான தகவல்களை அளித்தால் அது கிரிமினல் குற்றமாக கருதப்பட்டு நீங்கள் நீதிமன்ற வழக்கை சந்திக்க நேரிடும்.

Person 1: இது தொடர்பான அதிக தகவல்களை நான் எங்கிருந்து பெறுவது ?

Person 2: அதிக தகவல்களையும், எந்தெந்த குடும்பச்சூழ்நிலை மாற்றங்களை நீங்கள் தெரிவிக்கவேண்டும் என்பதையும் humanservices.gov.au எனும் எமது இணயதளம் வழியாகவோ, அல்லது அருகாமையிலுள்ள Service centre - லோ அல்லது 131202 எனும் தொலைபேசி இலக்கத்தை அழைத்தோ பெற்றுகொள்ளலாம். அந்த தொலைபேசி இலக்கம் – 131202

*நீங்கள் அழைக்கும் தொலைபேசியைப் பொறுத்து கட்டணம் மாறுபடக்கூடும். பொது தொலைபேசியிலிருந்தோ அல்லது மொபைல் கை தொலைபேசியிலிருந்தோ அழைத்தால் அதிக கட்டணம் செலுத்தவேண்டிவரும்.*

## Avoid a debt

**Person 1: If I receive a payment from the Department of Human Services and something changes with my personal situation, do I need to tell them?**

**Person 2:** Yes, it is very important that you tell the department about any change to your situation or your partner's within 14 days of the change. A change to your situation might change the payment amount or payment type that you are entitled to.

**Person 1: What kinds of changes do I need to report to the department?**

**Person 2:** Well, for example, you need to tell the department if:

- the amount of income you or your partner receive changes
- your address or the amount of rent you pay changes
- you start or stop living with someone
- you get married, separate from your partner or your partner dies
- you or your partner start or stop studying or change your study load
- you or your partner leave Australia temporarily or permanently.

**Person 1: Why is it important to tell the department about these changes?**

**Person 2:** If you don't tell the department when your personal situation changes, you might be paid an incorrect amount. If you receive more money than you should, you will have to pay the extra money back.

**Person 1: What do I do if I owe the department money?**

**Person 2:** If you have to pay money back, you will be sent a letter explaining the situation and your payment options. If you will have trouble paying back the amount, you should contact the department to discuss an arrangement that will work for you.

Remember, it is important to always provide the Department of Human Services with an accurate report of your personal situation. You can be charged with a criminal offence if you provide false or misleading information about your situation.

**Person 1: Where can I find out more?**

**Person 2:** For more information, and for a full list of changes you need to report, you can:

- go to **humanservices.gov.au**
- visit your nearest service centre, or
- for information in Tamil, call **131 202**. That number again – **131 202**.

Call charges may vary depending on the telephone service provider. Calls from public telephones and mobile phones may be charged at a higher rate.